நியமிக்கப்பட்டுள்ளார். இத்தொழில் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பொருட்களை வாங்குவதற்காக, மாநில வீட்டு வசதி வாரியத்துடனும் தென் பகுதி மாநிலங்களிலுள்ள பிற முக்கிய பொதுத்துறை நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: இம்மாதிரி உற்பத்தி செய்யக்கூடிய துப்புரவு? சாதனங்கள் நல்லமுறையில் செய்யப்படுகிறதா? அவைகளை நம் தமிழ்நாட்டிலுள்ள சானிட்டரி சம்பந்தமான நிலையங்கள் வாங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றனவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம் விற்பனையை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் வெளிச் சந்தையில் இருக்கக்கூடிய போட்டி காரணமாக இப்போது விற்பனை குறைந்து வருகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: களிமண்ணால் செய்யக்கூடிய இந்த மட்பாண்டங்களை மாற்றி க்ளே என்ற மண் இருக்கிறது, பீங்கான் செய்யக்கூடிய மண் இருக்கிறது. அதில் இவற்றைச் செய்வதற்கான எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா? அதற்கு வேண்டிய சாதனங்களை அவர்களுக்கு அளித்து அவற்றை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா? "மாயனூர் குயவன் செய்த மண்பாண்டம் ஓட்டடா" என்பதில் ஓட்டடா என்பதை விட்டுவிட்டு நான் மேற்சொன்னபடி செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மண்ணில் பல வகை உண்டு. மட்பாண்டத் தொழிலில் எந்தெந்த மண் வகைகளைப் பயன்படுத்தலாமோ அதைப் பயன்படுத்தி வெளிச்சந்தையில் நன்கு விற்பனை செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## *Sub-Magistrate Courts*

* 421 *Q.*—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to shift the Sub-Magistrate Court in Tenkasi in Tirunelveli district to the compound of the District Munsif's Court in Tenkasi?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

* 422 வினா.—திரு. பி. ஜயராஜ்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூ மாவட்டம், நன்பிமம் தாலுக்கா தலைநகரில் Sub-Magistrate Court ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. டி. மார்டின்: நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடியிலிருந்து இது போன்றதொரு கோரிக்கையும் அதுபோல் திருநெல்வேலியிலிருந்து ஒரு கோரிக்கையும் அந்த பார் அஸோஸியேஷன்கள் ரெஸல்யூஷன் மூலம் இந்த சர்க்காருக்கு தெரிவித்ததுண்டா? ஆமெனில், அந்தவிதமாக பார் அசோசியேஷன் வழக்கறிஞர்கள் கொடுத்துள்ள கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இந்த

மாஜிட்ரேட் கோர்ட்டையும், மாவட்ட முன்சிப் கோர்ட்டையும் ஒரேயிடத்தில் வைப்பதற்கான செயற்குறிப்பை வருகிற ஆண்டிலாவது அரசு பரிசிலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: பொதுவாக வழக்கறிஞர் சங்கம், நீதி மன்றங்கள் ஒரேயிடத்தில் இருந்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும், பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும் என்ற கோரிக்கையைக் கொடுத்து வருகிறார்கள். எங்கெங்கு செயல்படுத்த முடியுமோ, அங்கு செயல்பட வைத்தது. பண வசதிக்கு ஏற்றவாறுதான் கோரிக்கைகளை ஏற்க முடியும்.

**திரு. ஆ. கு. சுப்பையா**: தலைவரவர்களே, நன்னிலம் தாலுக்காவிலிருந்து திருவாரூருக்கு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, நன்னிலத்திலே அப்படி ஆரம்பிக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்குக் கோரிக்கைகள் வந்தனவா? அது சம்பந்தமாக என்ன பரிசிலனை செய்தார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: முன்னரே இதைப்பற்றி பரிசிலிக்கப்பட்ட பொழுது அரசாங்கம் இதைத் தள்ளுபடி செய்திருக்கிறது.

**கொடவாசல் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி**: தலைவரவர்களே இந்த நன்னிலம், தாலுக்கா தலைநகரம். மேலும் ஏற்கெனவே, இங்கு சப்-மாஜிஸ்ட்டிரேட் கோர்ட் இருந்திருக்கிறது. ஏற்கெனவே, பழைய சர்க்கார் நிராகரித்த காரணத்தால், இந்த அரசாங்கமாவது அதை அனுதாபத்தோடு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: நன்னிலத்திற்கும், திருவாரூருக்கும் பல பிரச்சினைகள் இருந்திருக்கின்றன. ஆனால் அன்றைக்கு திருவாரூரில் மட்டும் போதும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். மறுபடியும் உயர்நிதிமன்றம் நன்னிலத்தில் வைத்தாலும் வேலை இருக்கும் என்ற புள்ளி விவரங்களைத் தருவார்களானால், அதைப்பற்றிப் பரிசிலிக்கலாம்.

### அரசுப் பேருந்துகளுக்கான டயர்கள்.

* 423 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சர்க்கார் பஸ்களின் டயர்களைப் புதுப்பிக்கச் செய்ய Retread எந்தெந்த கம்பெனிகளிடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறையின் பேருந்துகளின் டயர்களை புதுப்பிக்க தனியார் கம்பெனிகளிடம் கொடுக்கப்படுவதில்லை. டயர்கள் புதுப்பிக்கும் வேலை போக்குவரத்துத் துறையிலேயே செய்யப்படுகிறது.

* 424 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுப் போக்குவரத்துத் துறையில் பல உந்து வண்டிகள் டயர்கள் இல்லாத காரணத்தால் அடிக்கடி நின்று போவதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?